TAMIL NADU LEGISLATIVE LIBRARY
2 0 AUG 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1980 பிப்ரவரி, 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

திட்டப் பணிகளுக்கு கூடுதல் நிதி உதவி.

*வினா எண். 121—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979–80 வருடத்திற்கு மாநிலங்களுக்கு மேற்கொண்டு உதவி அளிக்கத் திட்டக் கமிஷன் திட்டமுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தமிழகத்திற்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கும்?

(இ) எதன் அடிப்படையில் தொகை நிர்ணயிக்கப்படுகிறது?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)—

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்திற்கு ரூபாய் 30 கோடி கூடுதல் நிதியுதவி கிடைக்கும்.

(இ) இந்தக் கூடுதல் நிதியுதவி நமது மாநிலத்தில் மக்கள் தொகை, நபர்வாரி வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டம் எங்கு நடந்தது? எப்போது நடந்தது? அதில் யார்யார் பங்கு பெற்றார்கள்? பல்வேறு விவாதங்கள் நடைபெற்றதில், தமிழக அரசுக்கு

அதிகம் வேண்டுமென்று நமது அமைச்சர்கள் அதிகம் வாதாடியதால், அதன் அடிப்படையில் எவ்வளவு தொகை கிடைத்தது என்பதை அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—பேரவைத் தலைவர் அவர்களே, தேசீய வளர்ச்சிக் குழுவின் கூட்டம் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24, 25 தேதிகளில் டெல்லியில் நடந்தது. அதில் அனைத்து மாநில முதல் அமைச்சர்களும், நிதி அமைச்சர்களும் கலந்துகொண்டனர். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், நிதி அமைச்சர் நாஞ்சிலார் அவர்களும் தமிழகத்திற்காக வாதாடி 27 கோடி ரூபாய் அதிகம் பெற்றார்கள். அதிகாரிகள் மட்டத்தில் விவாதித்து அதிக நிதி உதவி வேண்டுமென்று கேட்டுப் பெற்றது ரூ. 603 கோடியே 12 இலட்சம். பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, அமைச்சர் வாதாடி வந்ததற்குப் பிறகு, அது ரூ. 630.12 கோடி ஆயிற்று.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ் நாட்டின் திட்ட மதிப்பீடு எவ்வளவு? அதற்கு மத்திய அரசு எவ்வளவு நிதி தருகிறது? அப்படித் தரவில்லை என்றால், மத்திய அரசிடம் மாநில அரசு வாதாடி, அந்த நிதியைப் பெறுவதற்கு வற்புறுத்துமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்)—பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் திட்ட மதிப்பீடு ரூ. 2,150 கோடி ஆகும். மாநிலத்தின் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசின் நிதி உதவி ரூபாய் ரூ. 630.12 கோடி என்று மத்திய திட்டக் குழு அறிவித்து, முடிவாக வந்திருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தமிழக அரசு வாதாடி ரூ.27 கோடி அதிகம் பெற்றதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், நம்முடைய கோரிக்கைக்கு ஏற்ப அந்தத் தொகை நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்படவில்லை. என்னுடைய கேள்வி என்னவென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை * * * * * * நடைபெறுகின்ற இந்த நேரத்தில் பண உதவி சம்பந்தமாக இழுத்துப் பிடிக்கின்ற ஒரு நிலை இருக்கின்ற போது, காங்கிரஸ் அல்லாத மற்ற மாநிலங்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். தயவு செய்து இந்த நேரத்தில் மற்ற அரசுகளை * * என்ற வாதம் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கு அகற்றப்பெற்றது.

1980 பிப்ரவரி 13]

Thiru R. UMANATH : This is a serious point beeause it concerns finance. This is a general question agreed to by all Opposition parties. It is a quettion of financial assistance. That was what I was coming to...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தத் தேவையில்லை.

திரு. ரா. உமாநாத்: என்னுடைய வாதம், அரசியலில் இந்த மாதிரி செய்வதற்கு இல்லாமல்போகிறது...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தத் தேவையில்லை. அதுவேண்டாம். அதை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாநில அரசுகளுக்குச்சிக்கலான நிலைமையை உண்டாக்கி, கொடுக்கவேண்டிய நிதியைக் கொடுக்காமல், அதன் பேரிலே பிரேக் போடுவது, அதைத் தடுப்பதற்கான நிலைமையை உண்டாக்குவது, அதைச் சந்திப்பதற்கு மற்ற காங்கிரஸ் அல்லாத மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நம்முடைய முதல் அமைச்சர் முன்கை எடுப்பார்களா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்த விதத்தில் ஒரு எண்ணம் கொண்டிருப்பதாக மாநிலத் அரசுக்கு தகவல் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய திட்ட உதவி ஆண்டுதோறும் ஒரே குறிப்பிட்ட தொகை கிடைக்கிறதா அல்லது வேறுபட்ட தொகை கிடைக்கிறதா ? இந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, இந்த ஆண்டு ஏதாவது குறைப்பதற்கு முயற்சிகள் தொடர்ந்தால், மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : நார்மல் பிளான் அசிஸ்டன்ஸ் ஒரே குறிப்பிட்ட தொகை எந்த ஆண்டும் கொடுத்ததில்லை. மத்திய அரசு நிர்ணயம் பண்ணும் தொகைதான் கிடைக்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் "காட்கில்விதி"யின்படி மத்திய அரசு நிர்ணயம் பண்ணி நடப்பு ஆண்டில் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 79.10 கோடி ரூபாய் ஆகும்.